**தேசிய விஞ்ஞான மன்றம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய விஞ்ஞான மன்றத்தின் (''மன்றம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 நிதிக்கூற்றக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் | இந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்தல் தற்போதும் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற கிரயப் பெறுமதி ரூபா 94,525,117 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் இந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்படுகின்றது. பெறுமானத்தேய்வு முடிவடைந்த சொத்துக்கள் மீண்டும் மீளாய்வு செய்தல் இந்த ஆண்டில் பூர்த்திசெய்யப்படும். | இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் 03 வகை மென்பொருள்களின் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் போது முன்னைய ஆண்டுகளின் செலவினமும் மீளாய்வாண்டின் செலவினமாக எடுக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் மிகை ரூபா 428,819 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குவதுடன் காலப்பகுதி மற்றும் பெறுமதியின் பிரகாரம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டுள்ள தொகை ரூபா 428,819 ஆகும். உரிய சரிசெய்தல் 2023 மே 22 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 9 இன் 35 ஆம் பந்தியின் பிரகாரம் மன்றத்தால் இருப்புக் கிரயத்தை இனங்காண்பதற்காக முதல் வந்தது முதல் விநியோகிக்கும் முறைமை | அவதானிப்புடன் இணங்குகின்றோம். நடைமுறையில் இருப்பு விநியோகிக்கும் போது முதல் வந்தது முதல் விநியோகிக்கும் முறைமை பின்பற்றப்பட்டிருந்த போதும் அவற்றை கணக்கீடு செய்யும் போது முறைமைக்குப் | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பயன்படுத்தப்படுவதாக கொள்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் களஞ்சியத்தின் மூலம் இருப்புக்களை விநியோகிக்கும் போது அந்தக் கொள்கைக்கு முரணாக செயற்பட்டிருந்த சந்தர்ப்பம் காணப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் வெளியிடப்பட்ட கிரயமான ரூபா 2,662,612 பெறுமதி நிறுவனத்தால் ரூபா 2,572,118 ஆக இனங்காணப்பட்டிருந்தமை யின் காரணமாக கிரயம் ரூபா 90,494 குறைத்து குறிப்பட்டிருந்தது. | புறம்மான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.5.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4 ஆவது பிரிவு | குழாம் வாகனங்களைக் நிர்வகித்தல் மற்றும் பராமரிப்பதற்காக போதியளவான முறைமைக் கட்டுப்பாடு மற்றும் திட்டமொன்று காணப்படுகின்றமை மற்றும் கிரயம் தொடர்பான கவனத்தில் கொண்டு உயர் முகாமைத்துவம் கண்காணித்து குழுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது குழுப் போக்குவரத்திற்காக ரூபா 826,044 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நடு அரைப் பகுதி முதல் குழுப் போக்குவரத்திற்காக வாடகை வாகனம் முழுமையாக நிறுத்தப்பட்டு குழுப் போக்குவரத்து வசதி வழங்குதலும் வாரத்திற்கு 02 நாட்களாக குறைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,045,055 மற்றும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 823,540 என கூட்டுமொத்தமாக ரூபா 2,868,595 ஆன கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 2,045,055 இந்த கடன்கொடுத்தோர் மீதி கருவா செயற்திட்டத்திற்காக நிதிஏற்பாடு வழங்கிய சிறிய அளவிலான கைத்தொழில் அமைச்சிற்கு தீர்க்கவேண்டியிருந்தது. இந்த செயற்திடத்திற்குரிய 05 ஆராய்ச்சிகளில் ஒரு மானியத்தின் இறுதிச் செலவின அறிக்கை கிடைப்பதற்கு இருந்ததுடன் அது கிடைத்தவுடன் நிறுவனத்திற்கிடையே செலவினங்கள் இணக்கஞ் செய்த பின்னர் மிகுதிப் பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>ரூபா 843,540 இந்த மீதி Covid 19 ஆராய்ச்சிக்காக கிடைத்த நன்கொடைப் பணமாக இருந்ததுடன் அதன் இறுதிச் செலவின அறிக்கை கிடைத்தவுடன் மிகுதிப் பணத்தை தீர்ப்பதற்கோ அல்லது நிறுவனத்தின் வேறு செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவது தொடர்பிலோ விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 38,548,294 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 12,722,038 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 25,826,256 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மூலதன மானியம் ரூபா 45,672,900 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் நிர்வாகரீதியிலான செயல்நடைமுறைகளில் ஏற்பட்ட தவறான தீர்மானத்தின் அடிப்படையில் மன்றத்தின் 02 உத்தியோகத்தர்களுக்கு 2014 யூலை 21 ஆந் திகதி கணக்கு உத்தியோகத்தர் பதவிக்காக நியமனக் கடிதம் வழங்கப்பட்ட போதிலும் பின்னர் அந்த நியமனம் இரத்துச்செய்யப்பட்டதன் காரணமாக உரிய தரப்பினரால் கொழும்பு பிணக்குகள் தீர்க்கும் பிரிவு மற்றும் கைத்தொழில் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் நியமனத்தை வழங்குவதற்கு இணங்கப்பட்டமையினால் அதற்காக செலவிடப்பட்ட சட்டக் கட்டணமான ரூபா 130,000 பயனற்ற செலவினமாக இருந்தது. | கணக்கு உத்தியோகத்தரின் பிரச்சினையை உள்ளகரீதியில் தீர்ப்பதற்கு 2014 முதல் முயற்சி எடுக்கப்பட்ட போதும் வெற்றியளிக்காமையினால் மாவட்ட தொழில் அலுவலகத்தில் கோவையிடப்பட்ட முறைப்பாட்டின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த வழக்கிற்கு நிறுவனத்திற்காக ஆஜராகுவதற்கு தகுதியான உத்தியோகத்தர் இல்லாமையினால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சட்டத்தரணி ஒருவரின் சேவை பெறப்பட்டு அதற்காக ரூபா 130,000 சட்டக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் தீர்மானம் எடுக்கும் போது செயற்திறனாகவும், வினைத்தினாகவும் செயற்படுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| - | | |
| (அ) சுகாதார அறிவியல் தொடர்பான ஆராய்ச்சி செயற்திட்ட உடன்படிக்கையின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குள் மிகுதிப் பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 04 செயற்திட்டங்களுக்குரிய கூட்டுமொத்தமான ரூபா 3,891,870 ஆன மிகுதிப் பணத்தை தீர்த்துவைப்பதற்கு | RPHS/2016/DTM 02, CKDu 03 , CKDu 05 மற்றும் CKDu 07 இன் மிகுதிப் பணம் தீர்க்கவேண்டியுள்ளது. | உடன்படிக்கையின் 2.4 இன் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டு ஒரு மாதத்திற்குள் மிகுதிப் பணம் தீர்க்கக்கூடிய வகையில் நிர்வாக மறைமையை விருத்தி செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆராய்ச்சியாளர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | தேவையினை உரியவாறு இனங்காணாமல் நிதிஏற்பாடு வழங்கப்பட்டதன் காணமாக சுகாதார அறிவியல் தொடர்பான ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 02 இற்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 10 மில்லியன் தொகையில் ரூபா 08 மில்லியன் ஒரு வருடத்திற்கு அண்மித்த காலமாக ஆராய்ச்சி செயற்திட்டத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். நிதியம் தொடர்பாக இடையூறு காணப்படுகின்றமையினால் RPHS / 2016/ CKDu / 01 ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக RPHS / 2016/ DTM / 01 செயற்திட்டத்தின் நிதியத்தைப் பயன்படுத்தி செயற்திட்டம் செய்யப்படுகின்றது.<br><br>RPHS/ 2016/ CKDu /03 செயற்திட்டத்தின் கீழ் முதல் 06 மாத காலத்தில் அணிதிரட்டல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றமையினால் ஊழியத்திற்கான கொடுப்பனவு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாதிருக்குமாயின் நியாயமான காலத்தில் மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் நிர்வாகத் திட்டத்தை பின்பற்றுதல் வேண்டும். |